03.12.2024

OS.No.173/2021

PW1– தவசி, த/பெ.பெத்துதேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.12.2024.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்தானது கனகசபாபதிபேரி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. கனகசபாபதிபேரி கிராமத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 143 வீடுகள் உள்ளது. அந்த 143 வீடுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தும் 3ம் பிரதிவாதி மடத்திற்கு சொந்தமான நிலங்கள் என்றால் சரிதான். மேலும் 150 ஏக்கர் நஞ்சை, 150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் 3ம் பிரதிவாதிக்கு சொந்தமானது.

3. 143 வீடுகள் அமைந்துள்ள மனைகள் மற்றும் அதனை சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தையும் கனகசபாபதிபேரி கிராமத்து மக்கள் 3ம் பிரதிவாதியிடம் குத்தகை பெற்று அனுபவம் செய்துவருகிறார்கள்.

4. 3ம் பிரதிவாதி குத்தகை கொடுத்த காலம் முதல் இன்றுவரை குத்தகைதாரர் கைவசம் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு நினைவு தெரிந்த காலம் மற்றும் பல ஆண்டுகாலமாக இவ்வாறுதான் இருந்துவருகிறது என்றால் சரிதான்.

5. குத்தகைதாரர்கள் தாங்கள் பெற்ற குத்தகை நிலத்தை உள்குத்தகைக்கு விடுகிறார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

6. குத்தகைக்கு கொடுத்த நிலங்களை 3ம் பிரதிவாதி இந்நாள்வரை அனுபவம் எதுவும் எடுத்ததில்லை என்றால் சரிதான்.

7. நான் எனது பிராதில் காட்டியுள்ள 1ம் தபசில் சொத்தில் மேல்பக்கம் 33 அடி நிலம் சுந்தரத்தம்மாள் எடுத்துள்ளாரா என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது. சுந்தரத்தம்மாளின் மகள் தான் சண்முகத்தாய் என்றால் சரிதான். அவர் ஆனால் ஊரில் இல்லை.

8. 1ம் தபசில் சொத்தில் மேல்பக்கம் 33 அடி நிலத்தில் சண்முகத்தாய் ஒரு சுற்றுச்சுவர் கட்டியுள்ளாரா என்றால் எனக்கு அதுபற்றிய விவரம் தெரியாது. ஆனால் அதில் ஒரு இடிந்தநிலையில் ஒரு சுற்றுச்சுவர் இருந்தது. ஆனால் 1ம் தபசிலை கொடுத்தது ஆதினம் தான்.

9. அந்த சுற்றுச்சுவரை ஒட்டிதான் நான் 2 வீடுகள் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதனை எந்த ஆண்டு வீடு கட்டினேன் என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்குள் தான் வீடு கட்டினேன்.

10. நான் கட்டிய 2 வீட்டிற்கு தென்பக்கம் ஒரு வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதை கட்டி 4 ஆண்டுகள் ஆகும். நான் வீடு கட்டுவதற்கு முன்பு அந்த இடத்திலிருந்து சாவடிக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மின்இணைப்புதான் எனது

பெயருக்கு மாற்றிகொண்டேன் என்றால் சரியல்ல. நான் புதிதாக தான் மின்இணைப்பு பெற்றுக்கொண்டேன்.

11. மேற்குறிப்பிட்டட சாவடியை சண்முகத்தாய் தான் கட்டினாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த சாவடியை, மடம் கட்டினார்களா என்ற விவரமும் எனக்கு தெரியாது. ஆனால் என்னிடம் தாவா சொத்தை வழங்கும்போது அதில் சுற்றுச்சுவர் இருந்தது.

12. என்னிடம், 3ம் பிரதிவாதி வழங்கிய குத்தகை ஒப்பந்தத்தில் தாவா சொத்தில் சுற்றுச்சுவர் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக 3ம் பிரதிவாதி மனையாக தான் குறிப்பிடுவார்.

13. சுற்றுச்சுவரின் கிழமேல் நீளம் 33 அடி என்றால் சரியல்ல. அது 42 அடி ஆகும். இதை அளந்து காண்பிக்க நான் தயாராக உள்ளேன்.

14. எனது வீட்டிற்கு மேல்புறம் ராமையா தேவர் வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் கிழமேல் ரோடு என்றால் சரிதான். கீழ்புறம் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள நிலம் என்றால் சரிதான், 1ம் தபசிலுக்கு வடபுறம் 2ம் தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதனை 3ம் பிரதிவாதியிடம் குத்தகைக்கு எடுத்துள்ளேன்.

15. 2ம் தபசில் சொத்திற்கு வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். அதன் தென்வடல் அளவு தெரியுமா என்றால் எனக்கு

தெரியாது. அதை பாதையாக தான் கூறுகிறார்கள். ஆனால் பாதையாக பயன்படுத்தப்படவில்லை. அந்த ரோட்டிற்கு வடபக்கம் 1,2 பிரதிவாதிகளின் குத்தகை நிலம் உள்ளது என்றால் சரியல்ல. அது 11 நபர்களுக்கு ஆதினத்திற்கு பாத்தியப்பட்ட 11 மனைகள் தான் உள்ளது. இந்த 11 மனைகளுக்கு வடபுறம்தான் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட குத்தகை நிலம் உள்ளது. அதில்தான் 1,2 பிரதிவாதிகள் முள்வேலி அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மற்ற நபர்களுக்கு பாத்தியப்பட்ட இடங்களிலும், எனக்கு பாத்தியப்பட்ட இடங்களிலும் முள்வேலி அமைத்து, ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள்.

16. 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்கள் நான் மேற்குறிப்பிட்ட ரோட்டிற்கு வடக்கே உள்ள நிலங்கள் ஆகும்.

17. எனது வீடு நமச்சியாபுரம் தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேல்புறம் 10 வீடுகளுக்கு அடிமனை 33 அடி அகலத்தில் 3ம் பிரதிவாதியால் குத்தகைக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேல்புறம் 5 வீடுகளுக்கு அடிமனை 33 அடி அகலத்தில் வழங்கப்பட்டது. இந்த மனைகள் 1963ம் ஆண்டு குத்தகையாக வழங்கப்பட்ட மனைகள் என்றால் சரிதான்.

18. எனது வீட்டின் கீழ்பக்கம் எல்லை சுற்றுச்சுவரில் முடிகிறது என்றால் சரியல்ல. சுற்றுச்சுவரை தாண்டியும் 2.6 அடி இடம் உள்ளது.

19. எனது வீடும், எனது வீட்டிற்கு மேல்புறமுள்ள வீடுகளும் நத்தம் வகையறையை சேர்ந்தது என்றால் சரியல்ல.

20. எனது வீடும், எனது வீட்டிற்கு கீழ்புறமுள்ள வீடுகளும் புஞ்சை வகையறையை சேர்ந்தது என்றால் சரிதான்.

21. எனது வீடு புல எண்.14 ல் உள்ளது என்றால் சரியல்ல. புல எண்.15 ல் உள்ளது.

22. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் நான் எந்த சொத்திற்காக கட்டப்பட்ட வரி என குறிப்பிடப்படவில்லை என்றால் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது. புல எண் குறிப்பிடப்படவில்லை.

23. வா.சா.ஆ.1 ஆவணம் தாவா சொத்திற்கான வரி ரசீது இல்லை என்றால் சரியல்ல.

24. வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணமானது ஒரே நாளில் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3,4 ஆவணத்தில் குத்தகை தொகை ஒரு ஆண்டுக்கு என்னவென்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் 23 ½ செண்டுக்கு இந்த ஆண்டு ரூ.2,350/-,

25. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது விலாசம் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

26. பொதுவாக 3ம் பிரதிவாதியிடம் ஏற்படுத்தப்படும் குத்தகைக்கு பத்திரம் வா.சா.ஆ.3,4 ஆவணங்கள்போல்தான் வழங்குவார்கள் என்றால் மனைக்கு மட்டும் தான் இவ்வாறு வழங்குவார்கள், புஞ்சை நிலங்களுக்கு ரசீது தான் வழங்குவார்கள்.

27. வா.சா.ஆ.3,4 ஆவணத்தில் கட்டளை 7ல் குத்தகைக்கு வழங்கப்பட்ட மனைகளில் பக்கா கட்டிடங்கள் கட்டக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

28. பிராது 1,2 தபசில் சொத்தை வா.சா.ஆ.3,4 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதில் காட்டியுள்ள எல்கைமால் இரண்டு தபசில் சொத்திற்கும் காட்டப்பட்டுள்ளது.

29. வா.சா.ஆ.3,4 ஆவணத்தின்படிதான் நான் குத்தகைதாரர் என உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

30. வா.சா.ஆ.3,4 ஆவணங்களானது நானும், 3ம்பிரதிவாதியும், ஸ்தல அதிகாரியும் வஞ்சக கூட்டுசதி செய்து தான் ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரியல்ல.

31. வா.சா.ஆ.4 ஆவணமானது வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2023ம் ஆண்டு ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரிதான். ஆனால் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும்.

(சாட்சியிடம் இந்நீதிமன்றம் சாட்சிய கூண்டில் நீதிமன்ற கண்ணியத்துடன் நிற்கும்முறை அறிவுறுத்தியும் சாட்சி, நீதிமன்ற கூண்டில் சாய்ந்துகொண்டு பதிலளித்ததால் நீதிமன்றம் முதல்முறை சாட்சியை எச்சரித்தது.)

33. வா.சா.ஆ.5 தீர்வை ரசீதானது தபசில் சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

34. வா.சா.ஆ.8 ஆவணமானது 3ம் பிரதிவாதியால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் முறையான அலுவலரால் வழங்கப்படாத ஆவணம் என்பதால் ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல

35. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம் என்றால் அதில் குறிப்பிட்டுள்ள மனைக்கு மேற்கே எனது வீடு உள்ளதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன்.

36. வா.சா.ஆ.10 ஆவணமானது வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

37. பிராது 1ம் தபசில் சொத்தில் மேல்பக்கம் 33 அடி நிலம் சுந்தரம்மாத்தாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சுந்தரம்மாள்

இறந்தபின்பு அவரது மகள் சண்முகத்தாய் தபசில் சொத்தில் ஒரு சாவடி கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. மின்இணைப்பு வாங்கினரா என்றால் நான் வாங்கும்போது மின்இணைப்பு இல்லை.

38. நான் சண்முகத்தாயிடம் இருந்துதான் உள்குத்தகைக்கு வாங்கி வீடுகள் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

39. நான் வழக்கிற்காக வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனக்கு வழங்கப்பட்ட 33 அடி இல்லாமல் 44 அடி என குறிப்பிட்டு 3ம் பிரதிவாதிகளுடன் வஞ்சக கூட்டு செய்து ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

40. 33 அடிக்கு கீழோரம் உள்ள 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டு, அந்த வேறு நபர்கள் , 1,2 பிரதிவாதிகளுக்கு உள்குத்தகைக்கு கொடுத்து அதை 3ம் பிரதிவாதியால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, தற்போது 1,2 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

41. 3 முதல் 5 தபசில் சொத்துக்களை 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி